ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
**HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA**

14.05.2018

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | දිනය<br>திகதி<br>Date |

செல்வி. பி. செல்வரத்தினம்,
செல்லத்துரை வீதி,
பெரியநீலவாணை.

**முறைப்பாட்டு இலக்கம்: HRC / KL/33/2013/1.**

தங்களின் வேண்டுகோளுக்கு அமைய ஆணைக்குழுவின் பரிந்துரையானது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அம்பிகா சற்குணநாதன்,
ஆணையாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

**Commissioner**
Human Rights Commission of Sri Lanka
No. 14, R.A. De Mel Mawatha,
Colombo 04.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| ප්‍රධාන කාර්යාලය<br>பிரதான அலுவலகம்<br>Head Office | 14, ආර්. ඒ. ද මෙල් මාවත, කොළඹ - 04.<br>14, ஆர்.ஏ.த. மெல் மாவத்தை, கொழும்பு - 04.<br>14, R. A. De Mel Mawatha, Colombo - 04. | සභාපති<br>தவிசாளர்<br>Chairperson | 011-2505451 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 011-2505541/74 |
| දුරකථන<br>தொலைபேசி<br>Telephone | 94 -11- 2505580/81/82 | ලේකම්<br>செயலாளர்<br>Secretary | 011-2505521 | ක්ෂණික<br>துரித அழைப்பு<br>Hotline | 011-2505575<br>1996 |
| ඊමේල්<br>மின்னஞ்சல்<br>e-mail | sechrc@sltnet.lk | වෙබ්<br>இணையம்<br>Web | www.hrcsl.lk | | |

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date: 22.02.2018 |

முறைப்பாட்டாளர் : செல்வி. பி.செல்வரத்தினம்
செல்லத்துரை வீதி
பெரியநீலவாணை

பிரதிவாதிகள் :

01. திரு.நாலக டி சில்வா, பி.பொ.மா.அ.
பணிப்பாளர்
பயங்கரவாத விசாரணைப் பிரிவு,
கொழும்பு 01.

02. பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்
கல்முனை – முஸ்லிம் பிரிவு, கல்முனை

03. மாகாணக் காணி ஆணையாளர்
மாகாணக் காணித் திணைக்களம், திருகோணமலை

04. செயலாளர்
சட்டம், ஒழுங்கு மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு
14வது மாடி, “சுஹுருபாய”,
ஸ்ரீ சுபுத்திபுர வீதி,
பத்தரமுல்லை

முறைப்பாட்டு இலக்கம்: **HRC/KL/33/13/1**

முறைப்பாடு

செல்லத்துரை வீதி, பெரியநீலவாணை-01ல் வசிக்கும் முறைப்பாட்டாளர் திருமதி. பெரியதம்பி செல்வரத்தினம் அவர்கள், அவருடைய மூன்று வீடுகளை பயங்கரவாத விசாரணைப் பிரிவு (இதன் பின்னர் TID என அழைக்கப்படும்) அதிகாரிகள் மார்ச் மாதம் 2013ம் ஆண்டில் பலாத்காரமாக கைப்பற்றி, அவற்றில் குடியிருக்கிறார்கள் என 2013 ஏப்ரில் 09ம் திகதி கல்முனையில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்தியக் கிளையில் முறைப்பாடொன்றை பதிவு செய்திருக்கிறார்.



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ප්‍රධාන කාර්යාලය / பிரதான அலுவலகம் / Head Office | 14, ආර්. ඒ. ද මෙල් මාවත, කොළඹ - 04. / 14, ஆர்.ஏ.த. மெல் மாவத்தை, கொழும்பு - 04. / 14, R. A. De Mel Mawatha, Colombo - 04. | සභාපති / தவிசாளர் / Chairperson | 011-2505451 | ෆැක්ස් / தொலைநகல் / Fax | 011-2505541/74 | විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / e-mail | sechrc@sltnet.lk |
| දුරකථන / தொலைபேசி / Telephone | 94 -11- 2505580/81/82 | ලේකම් / செயலாளர் / Secretary | 011-2505521 | ක්ෂණික / துரித அழைப்பு / Hotline | 011-2505575 1996 | වෙබ් / இணையம் / Web | www.hrcsl.lk |

AM/GR/5570 என பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு சுவர்ணபூமி ஒப்பினை உரிமையை தான் கொண்டுள்ளதாக முறைப்பாட்டாளர் மேலும் கூறுகிறார். LDO/KL/60 எனும் இலக்கத்தைக் கொண்ட LDO அனுமதிப் பத்திரத்தின் மூலம் இலங்கை அரசிடமிருந்து அவர் இதற்கான ஒப்பினையை பெற்றிருக்கிறார். சட்ட ரீதியற்ற முறையில் அவரது தனிப்பட்ட சொத்தில் குடியிருக்கும் TDD பிரிவை அப்புறப்படுத்தி அச்சொத்தை தனக்கு திருப்பித் தருமாறு ஆணைக்குழுவிடம் முறைப்பாட்டாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

<u>இ.ம.உ ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்தியக் கிளையால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு மற்றும் விசாரணைகள்</u>

2013 செப்டம்பர் 04ம் திகதி மற்றும் 2015 நவம்பர் 18ம் திகதி முறைப்பாட்டாளரின் முறைப்பாடு தொடர்பாக குறிப்பிட்ட பிரதேசத்தில் பிராந்தியக் கிளை வெளிக்கள புலனாய்வொன்றை நடாத்தியதோடு, சில பொருத்தமான ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்காக கல்முனை முஸ்லிம் பிரிவின் பிரதேச செயலாளரை சந்தித்தது. விசேடமாக கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் திரு.கே.எம்.பிரேமதிலக, கல்முனை பயங்கரவாத விசரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி திரு.யு.ஆர்.பி.உடகும்புர மற்றும் கல்முனை பயங்கரவாத விசரணைப் பிரிவைச் சேர்ந்த திரு.ஆர்.ஏ.யு.பிரியந்த அவர்களினது பங்களிப்புடனும் இது தொடர்பான பொருத்தமான அனைத்து உடந்தையாளர்களின் பங்களிப்புடனும் 2015 டிசம்பர் 01ம் திகதியன்று பிராந்தியக் கிளை ஒரு விசாரணையை மேற்கொண்டது.

கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளரின் அறிக்கைக்கேற்ப, குறிப்பிட்ட சொத்து எவ்வித பயங்கரவாத இயக்கங்களினாலும் பயன்படுத்தப்படவில்லை என்றும், ஆனால் முன்பு டி.எம்.வி.பி இயக்கம் இதை பலாத்காரமாக ஆக்கிரமித்திருந்தது என்றும் முறைப்பாட்டாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் அடிப்படையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகவும், 2015 டிசம்பர் 01ம் திகதி நடைபெற்ற விசாரணையில் முறைப்பாட்டாளரின் மருமகனான திரு.அமலதாஸ் பயங்கரவாத இயக்கமொன்றுடன் சம்பந்தப்பட்டிருந்தார் என்றும் மற்றும் குறிப்பிட்ட சொத்தும் அதன் காணியும் எல்டிடிஈ இயக்கத்தால் அபிவிருத்தி செய்யப்பட்டதென்றும் அவர்களால் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்தென்றும் கொழும்பு பயங்கரவாத பிரிவைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் திரு.கே.எம். பிரேமதிலக்க அறிவித்தார். பயங்கரவாத தடைப் பிரிவு, பொலிஸ் மாஅதிபர் மூலமாக அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் காணியையும் சொத்தையும் பறிமுதல் செய்வதற்காக 2011 ஆகஸ்ட் 29ம் திகதியிடப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் 7(1)ன் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட (எல்டி.டி.ஈ இயக்கத்தை தடைசெய்தல்) பிரமாணங்கள் இலக்கம் 1/2011 விசேட வர்த்ததமானியின் ஒழுகலாற்று இல. 1721/02 பிரிவு 7(1)ன் கீழ் கல்முனை முஸ்லிம் பிரிவு பிரதேச செயலாளர் குறிப்பிட்ட சொத்தின் உரிமையை இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு மாற்றினார்.

அதே அறிக்கையில் பயங்கரவாத விசாரணைப் பிரிவிற்கு ஒப்பினை மாற்றப்படவில்லையென்றும் ஆதலால் அதன் உரிமையில் முறைப்பாட்டாளருக்கே இதுவரை அதிகாரமுள்ளது என்றும் விசாரணையின் போது பிரதேச செயலாளர் சுட்டிக் காட்டியதை கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

கல்முனை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்திற்கு அனுப்பிய அவரது அறிக்கையில் 2015 டிசம்பர் 2ம் திகதி கல்முனை பிரதேச செயலாளர் மற்றும் தமிழ்ப் பிரிவிற்குரிய கிராம சேவகர்கள் ஆகியோர்களுடன் இதைப் பற்றி ஒரு முழுமையான கலந்துரையாடலொன்றை மேற்கொண்டதாக மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பிட்ட காணி மற்றும் சொத்து எந்த பயங்கரவாத இயக்கத்தினாலும் கொள்வனவு

செய்யப்படவோ அபிவிருத்தி செய்யப்படவோ இல்லையென பிரதேச செயலாளர் வலியுறுத்திக் கூறினார். சுனாமி நிவாரண வேலைதிட்டத்தின் கீழ் கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகத்துடன் ஒன்றிணைந்து சி.ஐ.எஸ் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தினால் குறிப்பிட்ட காணியில் அமைக்கப்பட்டுள்ள மூன்று கட்டிடங்களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

2016 நவம்பர் 29ம் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்தும் மற்றும் 2017 ஜனவரி 19ம் திகதி மற்றும் 2017 மார்ச் 13ம் திகதிகளில் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளரிடமிருந்தும் விசேடமாக முறைப்பாட்டாளருக்கு சரியான முறையில் உரித்துடைய சொத்தை பறிமுதலாக்கிய உரிமை கட்டளையை குறிப்பிட்டு அவற்றை உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழு மீண்டும் அறிக்கையொன்றைக் கோரியது. எவ்வாறெனினும், ஆணைக்குழுவிற்கு அவ்வாறானதொரு கட்டளையின் பிரதியொன்று கிடைக்காததால், ஆணைக்குழு சம்பந்தப்பட்ட அணைவரையம் விசாரணையொன்றிற்கு அழைத்தது.

அதன்படி, விசாரணை 2017 ஜூன் 20ம் திகதி நடைபெற்றது.

இவ்விசாரணையில் முறைப்பாட்டாளர் திருமதி.பெரியதம்பி செல்வரத்தினம் மற்றும் பிரதிவாதிகள், பயங்கரவாத விசாரணைப் பிரிவைச் சேர்ந்த பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. நாலக டி சில்வா, பயங்கரவாத விசாரணைப் விசாரணைப் சேர்ந்த பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பணிப்பாளர் திரு.எம்.ஏ.எம் நவாஸ், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் திரு.டி.எம்.என். திசாநாயக்கா அவர்களும் மற்றும் ஏனைய பலரும் பங்குபற்றினர்.

1990ம் ஆண்டு பதவியிலிருந்த அப்போதைய ஜனாதிபதி அவருக்கு 1990ம் ஆண்டு இக்காணியை அன்பளிப்பு செய்ததாகவும், அவர் இக்காணியில் தனது பிள்ளைகளுடன் 50 ஆண்டுகளாக வாழ்ந்து வருவதாகவும், அவர்களில் மூவர் பெண் பிள்ளைகளெனவும் முறைப்பாட்டாளர் விசாரணையின்போது வலியுறுத்திக் கூறினார். அவருக்கு இதைத் தவிர வேறு சொத்துக்களோ காணிகளோ கிடையாது. இவர் ஒருபோதும் எவ்விதமான பயங்கரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லையென்றும், முறைப்பாட்டாளருடைய மருமகன் ஜேசுதாஸ் அமல்தாஸ் ஏதாகிலும் குற்றங்களில் ஈடுபட்டிருந்தால் பயங்கரவாதப் விசாரணைப் பிரிவு சட்டத்திற்கேற்ப அவருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டும் என்றும் கூறினார்.

அவருடைய மகள் திருமதி.பிரேடா துஷ்யந்தியின் கணவர் (இல. 20957 - சீஊ) இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றும்போது வவுனியா ஆசிக்குளம் பிரதேசத்தில் கடமையிலிருந்த நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இக்காணியும் சொத்தும் எல்டிடியினரால் பயன்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டதை புலனாய்வின் மூலம் அவர்கள் உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் 2011 ஆகஸ்ட 29ம் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இல. 1721/2 இற்கேற்ப இக்காணியையும் சொத்தையும் பறிமுதல் செய்வதற்கு பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஏற்பாடுகளை மேற்கொண்டது. அதன்படி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் 2012 டிசம்பர் 28ம் திகதி இக்காணியை பறிமுதல் செய்து பொலிஸ் திணைக்களத்திற்கு ஒப்படைத்ததாக பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் திரு.எம்ஏ.எம்.நவாஸ் கூறினார்.

எல்டிடிஈ இயக்கத்தால் இக்காணி பயன்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டது எனும் உண்மை அறியப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட பிரச்சினைக்குரிய காணி பறிமுதல் செய்யப்பட்டு பொலி] திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதென சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் பிரதிநிதி விசாரணையின்போது கூறினார். போலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு மேலதிக செயலாளரினால் எழுதப்பட்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்டு 2012 அக்டோபர் 10 மற்றும் 2012 டிசம்பர் 12ம் திகதிகளிடப்பட்டு அனுப்பப்பட்டு, 2011 ஆகஸ்ட் 29ம் திகதி வெளியிடப்பட்ட 1721/02 இலக்கத்தைக் கொண்ட விசேட வர்த்தமானி அறிவித்துலுக்கேற்ப அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் குறிப்பிட்ட காணியையும் சொத்தையும்

பறிமுதல் செய்வதற்கு அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் (அப்போதிருந்த ஜனாதிபதி) கையொப்பமிடப்பட்டிருந்த சில ஆவணங்களின் பிரதிகளை சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் பிரதிநிதி விசாரணையின்போது சமர்ப்பித்தார்.

இச்சந்தர்ப்பத்தில், இலங்கை சனநாயக சோஷலஸ்க் குடியரசினால் 2011 ஆகஸ்ட 29ம் திகதி திங்கட்கிழமையன்று வெளியிடப்பட்ட 1721/2 இலக்கத்தைக் கொண்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரமாணங்களில் உள்ள 7(1) பிரமாணத்தின் ஏற்பாடுகளை கருத்திற் கொள்வது முக்கியமானதாகும். அது பின்வருமாறு கூறுகிறது:

"(7)1ன் கீழ் நடைபெறும் குறிப்பிட்ட விசாரணையின் பின்னர் ஜனாதிபதி அதை உகந்தது என்றும் சரியானது என்றும் கருதுவாராயின் மற்றும் யாரேனும் ஒருவரால் ஏதேனும் பணம், பங்குகள் அல்லது வங்கிக் கையிருப்புப் பணம் பாவிக்கப்படுவதாயிருந்தால் அல்லது அவைகள் குறிப்பிடப்பட்ட இயக்கத்தின் நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கு கருதினால் அவ்வாறான பணம், பங்குகள் மற்றும் கையிருப்புப் பணம் ஆகியவைகள் ஏதாகிலும் ஒருமுறையில் அவ்வாறான நபரொருவருடைய பாதுகாப்பின் கீழ் இருக்குமாயிருந்தால் அல்லது ஏதாகிலும் பணம், பங்குகள், வங்கிக் கையிருப்புக்கள் அவ்வாறான கட்டளையின் பின்னர் அவரின் பாதுகாப்பின் கீழ் வருமானால், அவ்வாறான நிறுவனத்திற்கு சொந்தமாக உள்ள ஏதாகிலும் ஏனைய அசையும் அல்லது அசையாச் சொத்துக்கள் ஜனாதிபதியின் எழுத்தின் மூல அறிவித்தலுக்கேற்ப அரசிற்கு பறிமுதல் செய்யப்படும்."

பிரமாணம் 7(1)ன் படி குறிப்பிட்ட ஒரு இயக்கத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் அல்லது பயன்படுத்த உத்தேசித்திருக்கும் ஏதாகிலும் அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கு அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு அதிகாரமுண்டு.

எடுத்துக் காட்டாக அமைந்துள்ள இவ்வழக்கில், காணி அபிவிருத்தி காரியாலயத்தின் LDO/K1/60 எனும் காணி அபிவிருத்திக் காரியாலய இலக்கத்தைக் கொண்டிருந்த காணியை AM/GR/5570 எனும் பதிவுசெய்யப்பட்ட இலக்கத்தின் கீழ் முறைப்பாட்டாளர் கையேற்றுக் கொண்டதோடு, பிரச்சினைக்குரிய இக்காணியின் உடமையுரிமை சுவர்ணபு+மி ஒப்பினை மூலம் [னாதிபதி அவர்கள் முறைப்பாட்டாளருக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதைப் போன்ற சற்று ஒத்த நிகழ்வொன்றில், அதிஉயர் நீதிமன்றத்தினால் SCFR மனு இல. 15/2010 தொடர்பாக ஜனாதிபதி சட்டத்தரணி, நீதிபதி பி.பி.அலுவிஹாரே அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை கௌரவ பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி, பிரியசாத் டெப் மற்றும் நீதிபதி அனில் குணரத்ன அவர்கள் அண்மையில் ஏற்றுக்கொண்டமையை கவனத்திற் கொள்வது பொருத்தமானது.

SCFR 15/2015 வழக்கில் மனுதாரர் பயங்கரவாதச் சட்டப் பிரமாணங்கள் 2009ன் (தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு தடையாணையிடுதலின்) கீழ் 7/1 பிரமாணத்திற்கேற்ப பறிமுதல் செய்யும் கட்டளை உரிய பருப்பொருளை கவனத்திற் கொள்ளாது, இயல்பு நியாய சட்டத்தை மீறி வழங்கப்பட்டுள்ளதாலும் மேற்குறிப்பிடப்பட்ட பறிமுதல் செய்யும் கட்டளை பகுத்திறிவிற்கு ஒவ்வாத, நடுநிலை பிறழ்ந்த கட்டளையொன்றாக இருப்பதாலும் பாதுகாப்பு அமைச்சர் எனும் பதவியின் கீழ் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் பிறப்பிக்கப்பட்ட கட்டளை சட்டப்படி முற்றும் செல்லாதது என்றும் சட்டத்தின் கீழ் வலுவற்றது என்றும் அறிவிக்கும் பிரகடனமொன்றை பிறப்பிக்குமாறும் நிவாரணங்களை வழங்குமாறும் மனுதாரர் வழக்கு மன்றத்தைக் வலியுறுத்திக் கோருகிறார்.

இவ்வழக்கின் முறைப்பாட்டாளர் பயங்கரவாத நடவடிக்கைளில் சம்பந்தப்பட்டிருந்தாரா அல்லது எல்டிடிஈ இயக்கத்தின் மூலம் இச்சொத்து அபிவிருத்தி செய்யப்பட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பயங்கரவாத விசாரணைப் பிரிவு தேவையான புலனாய்வு செயற்கிரமத்தை பின்பற்றியதா என்பதை இவ்வழக்கிலும் நாங்கள் சான்று மூலம் நிலைநாட்ட வேண்டும்.

விடயம் உண்மையாய் இருந்தால், பிரமாணம் 7(1)ன் கீழ் சொத்தை பறிமுதல் செய்வதற்கு அதிகாரமளிக்குமாறு அதிமேதகு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கும்படி பாதுகாப்பு செயலாளரிடம் மேலதிக செயலாளர் (பொலிஸ்) அனுமதி கோரியிருந்த வேளையில் செண்டர் போ ஹெல்த் கெயார் நிலையம் எல்டிடிஈ நிதியின் மூலம் நடாத்தப்பட்டுக் கொண்டிருந்தது என்பதை பொலிஸ் மாஅதிபர் அவர்கள் வலியுறுத்திக் கூறி உறுதிப்படுத்தியிருந்தார். மனுதாரரின் பிரதிநிதி செண்டர் போ ஹெல்த் கெயார் எனும் பெயரைக் கொண்ட நிறுவனத்திற்கு இக்கட்டிடத்தை குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்தார் எனவும், இந்நிறுவனம் எல்டிடிஈ இயக்கத்தின் முன்னிலை நிறுவனமொன்றெனவும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

அதன்படி, பறிமுதல் செய்வதற்கான அதிகாரத்தை வழங்குமாறு கோரி அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு முகவரியிடப்பட்ட அதே ஆவணத்தில் பாதுகாப்பு செயலாளர் புறக்குறிப்பை இட்டிருந்ததோடு, அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் அதில் "அனுமதி வழங்கப்பட்டுள்ளது" எனும் புறக்குறிப்பிட்டு கையொப்பமிட்டிருந்தார்.

இந்நிலையில், அச்சந்தர்ப்பத்தில் வழக்காற்றிலிருந்த இல. 7(1) பிரமாணம் எனும் அவசரகால பிரமாணங்கள் (எல்டிடிஈ இயக்கத்திற்கு தடையாணையிடும் கட்டளை) 1583/2 எனும் இலக்கத்தின் கீழ் 2009 ஜனவரி 07ம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதோடு, குறிப்பிட்ட விசாரணையொன்றின் பின்னர் அமைச்சர் பொருத்தமானது எனக் கருதினால் குறித்த நிறுவனமொன்றின் உரிமையிலுள்ள ஏதாகிலும் அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை அரசிற்கு பறிமுதல் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

சொத்துக்களை பறிமுதல் செய்தமை விதிகளுக்கு கட்டுப்படாத மற்றும் வரம்பு மீறிய செயலென ஜனாதிபதி சட்டத்தரணி, நீதிபதி அலுவிஹாரே அவர்கள் தீர்ப்பு வழங்கியதோடு, (ஜனாதிபதியாயிருந்த) பாதுகாப்பு அமைச்சர் இயல்பு நியாயக் கொள்கைக்கு இணங்கி செயலாற்றியிருக்கவில்லை என்பதால் மனுதாரர் கோரியுள்ளவாறு பறிமுதல் செய்தது சட்ட விரோதமானது எனும் தீர்ப்பையும் வழங்கினார்.

பறிமுதல் செய்வதற்கான கட்டளையை இடுவதற்கு முன்னர் பறிமுதல் செய்யப்படும் சொத்து தடைசெய்யப்பட்ட நிறுவனமொன்றிற்கு உரித்தானது எனும் விடயம் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட வேண்டியது இன்றியமையாதது என ஜனாதிபதி சட்டத்தரணி, நீதிபதி அலுவிஹாரே அவர்கள் கருதினார்கள்

நிகழ்கிற வழக்கில், 1721/2 எனும் இலக்கத்தின் கீழ் 2011 ஆகஸ்ட 29ம் திகதிய விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் படி பிரிவு 7 (1) இற்கேற்ப குறித்த விசாரணையின் பின்னர் அது திருப்திகரமானது என அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் கருதினால் "பொருத்தமானது எனக் கருதும் பட்சத்தில்" அதற்குரிய பறிமுதல் செய்யும் அதிகாரம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. முன்னைய பிரமாணங்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு அதிகாரத்தை வழங்கிய போதிலும், தற்போது பயன்படுத்தக் கூடிய பிரமாணங்கள் ஜனாதிபதி அவர்களுக்கே அதிகாரத்தை வழங்குகின்றது. எனினும், பறிமுதல் செய்யப்படுவதற்கான கட்டளையை இடுவதற்கு முன்னர் தற்போது பயன்படுத்தப்படும் பிரமாணங்களின் கீழ் ஜனாதிபதி அவர்கள் விசாரணையொன்றை மேற்கொள்வது அவசியமெனும் கருத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு கொண்டுள்ளது.

சொத்து எல்டிடிஈ இயக்கத்திற்கு சொந்தமானது அல்லது எல்டிடிஈ இயக்கத்தினால் பயன்படுத்தப்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்காக முறைப்பாட்டாளரின் காணியையும் சொத்தையும் பறிமுதல் செய்வதற்கான கட்டளையை இடுவதற்கு முன்னர் ஜனாதிபதி அவர்களால் அவ்வாறான விசாரணையொன்று நடாத்தப்பட்டதா எனும் கேள்வி இச்சந்தர்ப்பத்தில் எழுகின்றது.

தற்போதைய நிலையில், பிரமாணம் 7(1)ல் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு முன்னாள் ஜனாதிபதி விசாரணையொன்றை மேற்கொள்ளவில்லை என்பது தெளிவாகின்றது. அத்துடன் காணியினதும் சொத்தினதும் உரிமை முறைப்பாட்டாளருக்கு உரியது என்பதை கருத்திற் கொள்ளாததோடு,

முறைப்பாட்டாளர் எல்டிடிஈ இயக்கத்துடன் சம்பந்தப்பட்டு அவர்களுடன் ஒத்துழைக்கவில்லை என்பதற்கு எதிரான முக்கியமான கருப்பொருட்கள் நிருபிக்கப்படவில்லை.

SCFR 15/2010 வழக்கில் பிரதிவாதி செண்டர் போ ஹெல்த் கெயார் மற்றும் மனுதாரர் ஆகியோர்களுக்கிடையில் ஏதேனும் தொடர்புகள் இருந்ததென்பதை நிலைநாட்ட பிரதிவாதிகள் தவறியுள்ளனர் என்றும் சொத்தை கையப்படுத்துவதற்கு எல்டிடிஈ இயக்கம் நிதி வழங்கியது என்று கூறுவதற்கான ஆதாரங்களும் கிடையாது என்றும் [னாதிபதி சட்டத்தரணி, நீதிபதி அலுவிஹாரே அவர்கள் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

முறைப்பாட்டாளரின் மருமகனான [சுதா] அமலதா] எல்டிடிஈ இயக்கத்துடன் ஏதேனும் தொடர்புகளை கொண்டிருந்திருப்பின் மருமகனின் நடவடிக்கைளுக்காக முறைப்பாட்டாளரைத் தண்டிப்பது ஒரு நியாயமற்ற அநீதியான செயலாகும். குறிப்பிட்ட கட்டிட சுற்றுப்புறங்களில் உள்ள சொத்துக்கள் சிடிஎ] சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தினால் சுனாமி நிவாரண வேலைதிட்டத்தின் கீழ் கல்முனை தமிழ் பிரதேச செயலாளர் காரியாலயத்தின ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டதோடு, எல்டிடிஈ இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்ததற்கான எவ்விதமான சான்றுகளும் காணப்படவில்லை.

மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் பயங்கரவாத விசாரணைப் பிரிவு [னாதிபதிக்கு உண்மையான நிலையை காட்டத் தவறியுள்ளது என்றும் சம்பவத்தின் பு+ரணமான உண்மைச் செய்தியை அதிமேதகு [னாதிபதி அவர்களுக்கு கணிப்பிட்டு வழங்க வேண்டியது பயங்கரவாத விசாரணைப் பிரிவு மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகிய நிறுவனங்களின் கடமை என்பதை தெளிவாக விளங்கக் கூடியதாய் உள்ளது.

அனைத்து விடயங்களையும் கவனத்திற் கொண்டு, மேற்கூறப்பட்ட 7(1) பிரமாணத்திற்கேற்ப அதிமேதகு [னாதிபதி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின கீழ் முறைப்பாட்டாளரின் காணியும் சொத்தும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாலும், பிரமாணம் 7(1)ன் தேவைப்படுத்தலுக்கேற்ப இவ்விடயம் தொடர்பாக பொருத்தமான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் இச்சம்பவம் நிறைவேற்றப்படவில்லை என்பதாலும் அரசியல் யாப்பின் அதிகாரம் 12(1)ல் உறுதி செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டாளரின் அடிப்படை உரிமைகளை அரசு மீறியுள்ளது.

பரிந்துரை:

2011 ஆக]ட் 29ம் திகதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் இல. 1721/2 ன் கீழ் பிரிவு 7(1)ன் ஏற்படுகளுக்கு மாற்றமாக முன்னாள் [னாதிபதி முறைப்பாட்டாளரின் காணியையும் சொத்தையும் பறிமுதல் செய்தார் என்பது முறைப்பாட்டாளரின் முறைப்பாட்டை கவனத்திற் கொள்ளும்போது தெளிவாகியுள்ளது.

1 இலிருந்து 4 வரையுள்ள பிரதிவாதிகளுக்கும், அதேபோன்று அதிமேதகு [னாதிபதியின் செயலாளர் அவர்களுக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீரப்பை கவனத்திற் கொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரை செய்கிறது.

1 இலிருந்து 4 வரையுள்ள பிரதிவாதிகள், அதேபோன்று அதிமேதகு [னாதிபதியின் செயலாளர் அவர்கள் முன்னாள் [னாதிபதி அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பறிமுதல் செய்யும் கட்டளையை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும், உடனடியாக இச்சொத்து முறைப்பாடாளருக்கு திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரை செய்கிறது. நட்டஈட்டுத் தொகையாக ரூ.300,000/- வழங்கப்பட வேண்டுமென்றும், முறைப்பாட்டாளருக்கு அரசினால் கிரயம் செலுத்தப்பட வேண்டுமென்றும் ஆணைக்குழு பரிந்துரை செய்கிறது.

ஆணையாளர்
இலங்கை மனித உரிமைகள் அணைக்குழு

ஆணையாளர்
இலங்கை மனித உரிமைகள் அணைக்குழு